1981 ஏப்ரல் 10]

[முற்பகல் 10.10]

திரு. த. வேணுகோபால் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 16–3–1980 அன்று புதிய பள்ளிக் கட்டிடம் கட்டப்பட்டு, அதில் அந்தப் பள்ளி நல்ல முறையில் இயங்கி வருகிறது என்று கூறினார்கள். மரத்தடியில் அந்தப் பள்ளி நடந்து வருகிறது என்று நான் குறிப்பிட்டேன். அந்தப் புதிய கூரைக் கட்டிடத்திற்கு பதிலாக, ஆதிதிராவிட நலத் துறை மூலமாக நடத்தப் பெறும் அந்தப் பள்ளிக்கு நிரந்தரக் கட்டிடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசிலனை செய்யும்.

அரிசனங்களுக்கு ஆதி திராவிடர்கள்' என்று பெயர் மாற்றம்

* வினா எண். 667 திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக் விடையளிப்பாரா ;

(அ) தமிழக அரசு உத்திரவுப்படி ஆதிதிராவிடர்கள் என்ற பெயர் மாற்றம் குறித்து அச்சமூக மக்களிடமிருந்து ஆட்சேபணை கள் ஏதும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் பெயர் மாற்றம் குறித்து அரசு மறு பரி சீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :— அ) ஆம்

ஆ) இம் மனுக்கள் பரிசீலனையில் உள்ளன.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆதித் திராவிடர் என்ற சொல் அந்தச் சமுக மக்களிடையே உள்ள ஒரு பிரிவினரைத்தான் குறிக்கிறது என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்டோர் ஜாதிப் பட்டியலில் இருக்கின்ற பிரிவுகளில் 'ஆதித்திராவிடர்' என்கிற ஒரு இனம் இருக்கிறது. ஆனால் தற்போது அரசு ஆதித்திராவிடர் என்று பன்மையில் அனைத்துப் பிரிவினரையும் இணைக்கும் வகையில் தான் அமைத்து இருக்கிறது.

திரு. ஜி. மூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, ஆதித் திராவிடர் என்ற பெயருக்கு எதிர்ப்புகள் வந்து இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அது குறித்துப் பரிசீலிப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். தயவு செய்து, அது குறித்து பரிசீலிக்க வேண்டாம். இந்த ஆதித் திராவிடர் என்ற பெயரையே வைத்துக்கொள்ள அரசு கண்டிப்பாக முன் வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நல்ல ஆலோசனை.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

குறிப்பு :—[ஓர் உரையில் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

அ. கேள்விகள் கட்சிவாரியாக எடுத்துக் கொள்வது

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய கேள்விப் பட்டியலில் 20 கேள்விகள் இடம் பெற்றுள்ளன. நான் திரும்பத் திரும்பப் பார்த்தேன். எங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் கொடுத்துள்ள கேள்விகளில் ஒன்றாவது இடம் பெற்று இருக்கிறதா, அனுமதிக்கப் பட்டு இருக்கிறதா என்று. ஆனால் ஒன்றும் இல்லை. ஆனால் போனால் போகட்டும் பாவம் என்று நேற்றைக்கு முன்தினம் திருமதி இராஜாம்பாள் கொடுத்த கேள்வி ஒன்று இடம் பெற்றுள்ளது. நான் இன்னும் சொல்வேன். இந்த மன்றத்தில் வருகின்ற செவ்வாய்க் கிழமை அன்று எடுத்துக்கொள்ளப் படவிருக்கிற வினாப் பட்டியலையும் பார்த்தேன். அதிலேயும் ஒரு கேள்வி கூட இடம்பெறவில்லை. திரும்பத் திரும்ப ஒரு சிலர் கேட்டுள்ள கேள்விகளே இதில் இடம் பெறுவதால், நாங்கள் எங்களுடைய பணியை இங்கே சரிவர நிறைவேற்ற வில்லையோ என்கிற ஐயப்பாடு மக்களுக்கு எழக்கூடும். எங்களுடைய கேள்விகள் இந்தக் கேள்விப் பட்டியலில் இடம் பெறுவதற்கு நாங்கள் என்னதான் செய்யவேண்டும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்; தினந்தோறும் எப்படியாவது 3 துணை வினாக்கள் கேட்க மாண்புமிகு உறுப்பினர் வாய்ப்புப் பெற்று விடுகிறார்கள். கட்சி சார்பில் இங்கே கேள்விகள் அனுமதிக்கப்படுவது இல்லை. உறுப்பினர்கள் கேட்ட கேள்விகள் துறைகளுக்கு அனுப்பப்படுகின்றன. துறைகளில் இருந்து விடைகள் வரப்பெற்றுள்ள வினாக்கள் இங்கே முறைப்படி எடுத்துக்கொள்ளப் பெறுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுள்ளது போல், திருமதி இராஜாம்பாள் எழுப்பிய